15th March 1961]

மதகு மிகவும் சிறியதாய் இருக்கிறது. ஆகவே இன்னொரு புதிய மதகு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் தண்ணீர் போவதற்கு ஏற்படுத்தி மழை காலத்தில் இரவு நேரங்களில் காவல் போட்டு, அதன் மூலம் தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் அந்த இடத்தில் போய் பார்த்தேன். இதனல் மட்டும் உடைப்பு ஏற்படும் என்று தோன்றவில்லை. இருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனைகளையும் அதிகாரிகளுடன் கலந்து பரிசிலிக்கலாம்.

SRI S. M. ANNAMALAI : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர். ரெவின்யூ அமைச்சர் அவர்களால் மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் மாடக்குளத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக 1,651 குடிசைகள் சேதமடைந்தன என்றும் அதற்காக 26,115 ரூபாய் செலவு செய்ய ஒதுக்கியிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் இப்போது மராமத்து அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலில் 27 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இவர்களுக்குள்ளே இந்த முரண்பாடு ஏற்படுகிறது ? இது சரிதானு என்பதை கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : இப்போது மராமத்து அமைச்சர் அவர்களிடத்தில் கேட்ட கேள்விக்கு அவர்கள் சொன்ன பதில் சரி.

Cycle factory (Thanjavur)

* 844 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சையில் சைக்கிள் தொழிற்சாலை உற்பத்தி எப்போது துவங்கும் ?

(இ) இங்கு ஆண்டுதோறும் எத்தனை சைக்கிள்கள் செய்யப்படும் ?

(உ) எத்தனை தொழிலாளர்களுக்கு இதில் வேலை கிடைக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The bicycle Assembly Unit, Thanjavur is expected to go into production in about three months time or even shorter than that.

(இ) The anticipated production capacity of the Unit is 5,000 bicycles per annum.

(உ) About fifty workers are likely to be employed when the Unit commences production.

SRI A. VEDARATHNAM : இந்த தொழிற்சாலையில் என்னென்ன மாதிரியான சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படும் ? அதிலிருந்து ஆண்டுதோறும் எதிர்பார்க்கப்படும் வருமானம் என்ன ?

[15th March 1961

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரே ஒரு விதமான சைக்கிள்தான் உற்பத்தி செய்யப்படும், அது சாதாரணமாக நாம் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற சைக்கிள். எவ்வளவு வருமானம் வரும் என்பதற்கு இப்போது என்னிடம் கணக்கு இல்லை. எவ்வளவு உற்பத்தியாகும் என்பதற்குத்தான் கணக்கு இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : குழந்தைகள் உபயோகிக்கின்ற சைக்கிள், பெண்கள் உபயோகிக்கின்ற சைக்கிள், இவை போன்ற சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படமாட்டாதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது அதற்கு உத்தேசமில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether the proposed cycle factory will be started in the public or private sector and if it is in the private sector, who is the sponsor?

THE HON. SRI R. VENKATARAMAN : It is an Assembly Unit and it will be under the Government.

SRI S. NAGARAJA MONIGAR : Is it only an Assembly Unit or parts also are being manufactured?

THE HON. SRI R. VENKATARAMAN : Some parts will be manufactured but the entire parts for the cycle industry cannot be manufactured in a small scale industry.

SRI M. P. SARATHI : வேலூரில் சைக்கிள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக கட்டிடம் எல்லாம் கட்டி முடிந்து விட்டது, அதை இன்னும் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு காலமாகும்? அந்த பாக்டரிக்கான கட்டிடங்கள் கட்டி மூன்று வருடங்கள் ஆகி விட்டன. என் இந்த காலதாமதம் ஏற்படுகிறது?

MR. SPEAKER : இந்தக் கேள்வி தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றியது, கனம் அங்கத்தினர் கேட்கும் விவரங்களை அறிய வேண்டுமானால் தனிக்கேள்வி போடவேண்டும்.

Small-scale industry (Tiruttani)

* 845 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. VINAYAKAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the possibility of starting any small-scale industry in the Tiruttani taluk, Chingleput district, was explored after its merger with the Madras State; and

(b) the nature of help so far rendered to such industries in the private sector?